**செய்தி வெளியீடு எண் 114** **நாள் 23.02.2017**

## திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம் ஐயப்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் போரூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு. பா.பெஞ்சமின் அவர்கள், 11-ம் வகுப்பு பயிலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் 5 பள்ளிகளை சேர்ந்த 1220 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம் ஐயப்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் போரூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு. பா.பெஞ்சமின் அவர்கள், 11-ம் வகுப்பு பயிலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் 5 பள்ளிகளை சேர்ந்த 1220 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை இன்று (23.02.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் வழங்கினார்.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது “தமிழ்நாடு அரசு பள்ளி செல்லும் மாணவ, மாணவிகளுக்கு பல திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. மேலும் கல்வி கற்கும் மாணவர்கள் இடைநிற்றல் ஏற்படாமல் தவிர்த்து வருகிறது. பள்ளிக்கல்வித்துறையின் மூலமாக 14 வகையான பொருட்கள் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் குறிப்பிடப்படுபவை விலையில்லா மிதிவண்டிகள், விலையில்லா மடிக்கணினி, சீருடைகள், புத்தகபை, கலர்பென்சில், நோட்டுபுத்தகம் ஆகியவை மாணவர்களுக்கு விலையில்லாமல் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே இதுபோன்ற திட்டங்கள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு 2011 ஆண்டு முதல் பள்ளிக்கல்வி துறைக்கு ரூபாய் ஒரு லட்சத்தி 10 ஆயிரத்தி 323 கோடி ஒதுக்கீடு செய்தார்கள். இது மாநிலத்தின் நிதியில் ஐந்தில் ஒருபங்கு நிதி கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தியா அளவில் தமிழ்நாடு மாநிலம் கல்வி துறையில் சிறந்து விளங்குகிறது. இதுபோன்ற திட்டங்கள் மூலம் அனைத்து தரப்பு ஏழை எளிய மக்கள் தங்கள் குழந்தைகளின் கல்வி செலவுகளை குறைத்து அவர்களின் வாழ்க்கை தரம் உயர்வதாக உள்ளது. இதை உணர்ந்து அனைத்து மாணவர்களும் கல்வி பயின்று பல உயர்ந்த பதவிகளையும், சாதனைகளையும் செய்ய வேண்டும். இந்த ஆண்டு 100 சதவிகிதம் தேர்ச்சி அடைய அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கூறினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது “தமிழக அரசு பள்ளி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 14 உபகரணங்களை வழங்கி வருகிறது. இந்த கல்விஆண்டில் திருவள்ளூர் மாவட்டத்தில் 23ஆயிரத்தி 381 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது. அனைத்து தரப்பு மாணவ, மாணவிகள் இடைநிற்றல் தடுக்க தமிழக அரசு அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் மாணவ, மாணவிகள் தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை நோய்களை தடுக்கும் சிறப்பு கூட்டுத்தடுப்பூசி முகாம் பிப்ரவரி 6 முதல் 28 வரை நடைபெறுகிறது. இதில் அரசு, அரசு உதவி பெறும், தனியார் பள்ளிகள் மற்றும் சி.பி.எஸ்.இ பள்ளிகளில் பயிலும் 5லட்சத்தி 60ஆயிரம் மாணவ மாணவிகள், 9மாதம் முதல் 15 வயது வரை உள்ளவர்களுக்கும் தடுப்பூசி போடப்படவுள்ளது. இதனை அனைத்து மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவர்கள் உடல்நலன்களை பாதுகாத்தும், பள்ளிகளில் கல்வி கற்பது மட்டுமல்லாமல் மாவட்டம் மற்றும் மாநிலம் அளவிலான இடங்களை பெற்று மாவட்டத்திற்கு முதலிடத்தை பெற்று தர வேண்டும்.” என்று கூறினார்.

ஐயப்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 93 மாணவர்களுக்கும், 116 மாணவிகளுக்கும், முகப்பேர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 92 மாணவர்களுக்கும், 53 மாணவிகளுக்கும் என 145, போரூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 533 மாணவிகளுக்கும், போரூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 216 மாணவர்களுக்கும், கைகண்குப்பம் லேமேக் மேல்நிலைப்பள்ளியில் 75 மாணவர்களுக்கும் 42 மாணவிகளுக்கும் என 866 மாணவர்களுக்கும் என மொத்தம் 1220 மாணவ, மாணவிகளுக்கும் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.த.ராஜேந்திரன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.திவ்யஸ்ரீ, மாவட்ட கல்வி அலுவலர் (பொன்னேரி) திரு.கங்காதர ரெட்டி, மதுரவாயல் வட்டாட்சியர் திரு.மு,குமார், ஆவடி வட்டாட்சியர் திரு.பாபு, பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~